[1970 டிசம்பர் 2

மாயூரம் பகுதியில் பழவாற்றுக்குக் கரை அமைத்தல்

* 96 வினா:—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப் பாரா—

மாயூரம் பகுதியில் ஓடிக்கொண்டு இருக்கும் பழவாற்றுக்கு கரை அமைக்கும் வேலை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இடையனூர் பொறி மதகிலிருந்து மண்ணிய-சங்கமம் வரை பழவாற்றின் இருமருங்கிலும் வெள்ளத்தடுப்புக் கரைகள் அமைக்கப்பட்டுள்ளன. சிறப்புச் சிறு பாசனத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள இப்பணி ஏறக் குறைய முடிந்துவிட்டது.

திரு. என். கிட்டப்பா : அண்மையில் தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக, மாயூரம், சீர்காழி தாலூகாக்களில் ஏற்பட்ட வெள்ளச் சேதம் இந்தப் பழவாற்றுக்குக் கரைகள் இல்லாததால் என்பதை அங்கு நேரில் வந்து பார்வையிட்ட அமைச்சர் அம்மையார் அவர்கள் நேரில் அறிந்து கொண்டிருக்கிறார்கள், நீண்டகாலமாகவே அந்தப் பகுதியினர் பழவாற்றுக்கு இருமருங்கிலும் பலமுள்ள கரைகள் அமைக்க வேண்டும் என்று கோரி வருகிறார்கள். ஆகவே, பழவாற்றுக்கு இரு மருங்கிலும் கரைகள் அமைப்பதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வெள்ளச் சேதம் ஏற்பட்டிருந்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படு கின்றன. என் தகவலின்படி வேலைகள் ஏறக்குறைய முடிந்துவிட்டன என்பதாகும். இருந்தாலும் இப்போது வெள்ளத்தால் பாதிப்பு ஏற் பட்டிருக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : இந்தப் பழவாற்றுக்குக் கரை அமைக்க வேண்டும் என்று அப்பகுதியில் உள்ளவர்கள் நீண்ட காலமாகக் கேட்டுக்கொண்டு வருவதற்கிணங்க, இரண்டு மைல்கள் தூரத்திற்கு ஒரு பக்கம் மட்டும் போடப்பட்டு அது முடிவடைந்திருக்கிறது. பழவாற்றுக்கு இருமருங்கிலும் கரைகள் அமைக்கவேண்டுமென்று அப்பகுதி மக்கள் நீண்டநெடுங்காலமாகக் கோரி வருகின்றனர். ஆகவே, இனிமேலாவது அப்படி பழவாற்றுக்கு இருமருங்கிலும் பலத்த கரைகள் அமைப்பதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா ? இந்த ஆண்டிலாவது இரு மருங்கிலும் கரைகளைச் செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மேற்சொன்ன பகுதிகளில் உள்ள கரைகள் பின்னர் வெள்ளத்தினால் அரிக்கப்படும் போதெல்லாம் வலுப்படுத்தப்பட்டு நல்ல தரத்திற்குக் கொண்டு வரப்படும். வடிகால் நேரடியாக விழுகின்ற சிலயிடங்களில் வடிகால் வேலையை முறைப்படுத்துவதற்கான மதகுகளை அமைப்பது அவசியமாக உள்ளது. இது குறித்த செயற்குறிப்புகள் ஏற்கனவே

அனுப்பப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும். அன்னியாறு சங்கமத்திற்குக் கீழிருந்து உப்பாண்டம் வரை பழவாற்றில் வெள்ளத் தடுப்புக் கரைகள் அமைப்பதும் அவசியமாக வுள்ளது.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: சமீபத்தில் பெய்த பெருமழை காரணமாக கீழ்த் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆற்றுக் கரைகள் பூராவும் உடைந்து போயிருப்பதனால் அரசு ஒரு சிறப்புத் திட்டத்தை ஏற்படுத்தி, வருகிற கோடை காலத்திலாவது கரைகளைப் பலப்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தைச் சீர்ப்படுத்த அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது.

திரு. அ. மாரிமுத்து: தற்போது பெய்த மழை காரணமாகப் பழவாற்றுக்கு இருமருங்கிலுமுள்ள பயிர்கள் அநேக ஆயிரம் ஏக்கர்கள் நாசமாகியிருப்பதை அமைச்சர் அம்மையார் அவர்கள் பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். அங்குள்ள விவசாயிகளும், தனி நபர்களும் அமைச்சர் அவர்களிடம் குறிப்பிட்டது பழவாற்றுக்குக் கரையே இல்லை என்பதை அரசு உணர்ந்து ஆவன செய்ய வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் உடனடியாகக் கவனித்து ஆக்க வேலையில் ஈடுபடுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே பதில் கூறிவிட்டேன். வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. கரைகள் அமைக்கும் பணிக்கு திரு. கிட்டப்பா அவர்களுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன் —அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திருவண்ணாமலை—தானிப்பாடி சாலை வேலை

* 97 வினா.—திரு. கே. சகாதேவக் கண்டர்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து தானிப்பாடி போகும் நெடுஞ்சாலையில் ராதாபுரம் கிராமத்தில் இருந்து சுமார் ஒரு மைல் நீளத்திற்கு கருங்கல் பேபி ஜல்லிகள் ரோடின் ஓரமாக திப்பைகள் கட்டி வைக்கப்பட்டு சுமார் மூன்று ஆண்டுகளாக ரோடு போடாமல் நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்கு தெரியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) திருவண்ணாமலை–தானிப்பாடி சாலையில் (அரசு சாலை) ராதாபுரம் கிராமம் அருகில் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தார் போடும் பணி மேற்கொள்ளப்படவில்லை என்றும், சாலையோரங்களில் சாலை போடும் பொருட்கள் எவையும் கொட்டிவைக்கப்படவில்லை என்றும் தலைமைப்பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணிகள்) அறிவித்து உள்ளார்.